Source: Tamil Murasu, p3
Date: 11 May 2015





பள்ளிநாட்களிலிருந்து தொண்டூழியப் பணிகளில் ஈடுபட்டு வரும் பிரெமிக்கா, பொழுதுபோக்கு நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டு சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகிறார். சமூக அக்கறை நிறைந்த மருத்துவராகத் திகழ வேண்டும் என்பதுதான் இந்த இளையரின் எதிர்கால இலக்கு. (இடப்படம்) தொண்டூழியத்தின்போது கம்போடிய சிறார்களுடன், (வலப்படம்) நிதி திரட்டுக்காக மலாக்காவில் இருந்து சிங்கப்பூர் வரை சைக்கிள் பயணம் மேற்கொண்ட பிரெமிக்கா. **படங்கள்: மா.பிரெமிக்கா**

SG 50 **காலத்தின் குரல்கள்**

## 18. பிரெமிக்கா மாடசாமி

*2015 சிங்கப்பூரின் பொன்விழா ஆண்டு. இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் நம் சாதனை அசாதாரணமானது! இதன் அடிப்படை மக்கள்! நாட்டு நிர்மாணம், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, கலை என அனைத்துத் துறைகளிலும் தடம் பதித்து வரும் நம் மக்களில் 50 பேரை இந்த ஆண்டு முழுவதும் இத்தொடர் சிறப்பிக்கிறது. இவர்கள் மூலமாக தமிழ் முரசு கடந்த காலத்தை, நிகழ்காலத்தை, எதிர்காலத்தை எண்ணிப் பார்க்கிறது.*

# கல்வியோடு சமூகப்பணி



ப.பாலசுப்பிரமணியம்

> தெளிவாகச் சிந்திக்கும் திறன்பெற்ற இன்றைய இளையர்கள் தங்களது கனவை நோக்கிச் செயல்படுகிறார்கள். பிடித்ததைச் செய்கிறார்கள்.
>
> **பிரெமிக்கா மாடசாமி, 20**

வசதி குறைந்த வெளி நாட்டு சிறார்கள், சிறப்புத் தேவையுள்ள மாணவர்கள், வெளிநாட்டு ஊழியர்கள், முதியவர்கள் என பலதரப்பட்ட மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி வரும் இளையர் இவர்.

சிண்டா, விலங்கு ஆய்வு கல்விச் சங்கம், ஏஷியன் பெண்கள் நலச் சங்கம், இளைய சீக்கியர் சங்கம், ஸ்ரீ நாராயண மிஷன் இல்லம், பிரைட் விஷன் மருத்து வமனை எனப் பல அமைப்புகளில் தொண்டூழியம் செய்யும் 20 வயது மா.பிரெமிக்கா தேசிய பல்கலைக்கழக மருத்துவத் துறை மாணவர்.

இளையராக சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பங்கு நிறைய உள்ளது என்று கருதும் பிரெமிக்கா, சிங்கப்பூரில் வசதி குறைந்தவர்களுக்கு பல உதவித் திட்டங்கள் இருந்தாலும் அதைப் பயன் படுத்தாதவர்கள் இருக்கவே செய்கின்ற னர் என்றார்.

ஒருமுறை முதியவர்களின் வாடகை வீடுகளைச் சுத்தம் செய்யும் தொண்டூழிய நடவடிக்கையில் ஈடுபட்டபோது சமுதா யத்தின் பிளவுகளில் மாட்டிக் கொண்டு சிரமப்படுபவர்கள் பலர் இருப் பதை பிரெமிக்கா அறிந்தார்.

நிதிப் பற்றாக்குறையினால் எவ்வித சிகிச்சைக்கும் செல்லாமல் நோய்வாய்ப் பட்டு வீட்டிலேயே முடங்கிக் கிடக்கும் முதியவர்கள், அவருக்குத் தொண்டூழிய சேவையின் தேவையை உணர்த்தினர்.

சில வேளைகளில் தொண்டூழியப் பணி சவாலாக அமைந்தாலும் அதற்கு தேவையான உத்திகளைக் கற்றுக் கொள்வதில் பிரெமிக்கா சளைப்பதில்லை.

உதாரணத்திற்கு ஏஷியன் பெண்கள் நலச் சங்கத்தில் (AWWA) 2012ல் ஒரு தொண்டூழியராகச் சிறப்பு தேவை மாணவர்களுக்குக் கற்பித்தபோது மாணவர்களோடு எப்படி உரையாடுவது என்று தெரியாமல் குழம்பினார். பிறகு சைகைமொழியை முறையாக கற்றுக் கொண்டு அவர்களிடம் தொடர்புகளை வளர்த்துக்கொண்டார்.

யீஷூன் வட்டாரத்தில் வசிக்கும் பிரெமிக்கா அக்கம்பக்கப் பள்ளியான நார்த்லாண்ட் தொடக்கப் பள்ளியில் கல்விப் பயணத்தை தொடங்கி இன்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயில்கிறார்.

“என் பெற்றோர் பட்டதாரிகள் இல்லை, ராஃபிள்ஸ் பெண்கள் பள்ளியில் பயின்றபோது சக வகுப்பு மாணவர்கள் பெரும்பாலும் தனியார் வீடுகளில் வசித் தவர்கள். என்னுடைய வாழ்க்கை முறை மற்ற மாணவர்களோடு ஒப்பிடுகையில் வித்தியாசமாக இருந்தது,” என்ற பிரெமிக்கா எனினும் அது தம்மைப் பாதிக்கவில்லை என்றார்.

தெளிவாகச் சிந்திக்கும் திறன்பெற்ற இளையர்கள் தங்களது கனவை நோக்கிச் செயல்படுகிறார்கள் என்பதும் தங்களுக்குப் பிடித்ததைச் செய்கிறார்கள் என்பதும் பிரெமிக்காவின் கருத்து.

அதே நேரத்தில் இளையர்கள் சுய நலத்தோடு சிந்திக்காமல் பிறரைப் பற்றி யும் யோசிக்க வேண்டும், மற்றவர்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புத் தர வேண் டும், குறைகூறும் பழக்கத்தைக் கைவிட வேண்டும் என இவர் விரும்புகிறார்.

எதிர்காலப் போட்டித்தன்மையைச் சமாளிக்க மாணவர்கள் தாங்கள் படிக் கும் துறை சார்ந்த திறன்களோடு வேறு திறன்களையும் வளர்த்துக்கொண்டால் பயனளிக்கும் என இவர் கருதுகிறார்.

ஒரு முறை இவர் சமூக சேவை பணிக்காக இளையர்களைத் தொண்டூழி யம் புரிய அழைத்துச் சென்றிருந்தார். வீட்டிலிருந்த முதியவர்களைச் சந்தித்த இளையர்கள் அவர்களிடம் பேசாது மௌனமாக இருந்தனர்.

தொழில்நுட்பப் பயன்பாட்டினால் பிறரிடம் உரையாடுவது குறைந்து வர ஒருவரிடம் எப்படிப் பேசுவது, பழகுவது போன்ற நுணுக்கங்களை இளையர்கள் இழக்கிறார்கள் என்பது இவரின் கருத்து.

இளையர்கள் பல அமைப்புகளோடு தொண்டூழியம் புரிய முன்வந்தாலும், கொடுக்கப்பட்ட தொண்டூழியப் பணிகளைச் சிறப்பாகச் செய்தாலும் மனித தொடர்புகளில்தான் சிக்கல்கள் உள்ளன என இவர் விவரித்தார்.

தொண்டூழியப் பணி என்று வரும்போது பிரெமிக்கா நேரத்தைக் கணக்கிடுவதில்லை. வார நாள் அல்லது வார இறுதி நாட்களில் வெவ்வேறு சமூக அமைப்புகளில் இவர் தொண்டூழியம் புரிகிறார். இவர் தொண்டூழியம் புரியும் அமைப்புகளில் தொண்டூழியர்களுக்கென நீக்குப்போக்கான ஏற்பாடுகள் உள்ளதால் படிப்பிற்கும் சமூக பணிகளுக்கும் தனது சொந்த நடவடிக்கைகளுக்கும் இவரால் நேரத்தை நன்கு வகுக்க முடிகின்றது.

சிங்கப்பூரின் சீரிய வளர்ச்சியில் பெருமிதம் கொள்ளும் பிரெமிக்கா, கடந்த 50 ஆண்டுகளில் சிங்கப்பூர் சாதித்த பல விஷயங்கள் தன்னை பிரமிக்க வைப்பதாகக் கூறினார்.

அரசியல் தொடர்பான விஷயங்களில் அதிக நாட்டம் கொண்டுள்ள இவருக்கு அரசாங்கத்தின் கொள்கைகள் மீது சிலருக்கு அதிருப்தி இருந்தாலும் எந்த அரசாங்கமும் எல்லா வகையிலும் சிறப்பாகச் செயல்பட முடியாது என்பதை உணர்வது முக்கியம் என்றார்.

அனைத்துலக ரீதியில் சிங்கப்பூரின் அடையாளம் இன்னும் வலுவடைய வேண்டும் என்றும் அது பிரபல உள்ளூர் உணவு வகைகளைச் சார்ந்ததாக இல்லாமல் மக்களின் குணங்களைச் சார்ந்த ஒன்றாக இருக்க வேண்டும் என்றும் நினைக்கிறார்.

“நாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வெளிநாட்டு ஊழியர்களையும் நம் சமூகத்தில் ஒருமனதாக சேர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களை இன்னும் முழுமையாக ஏற்றுக்கொள்ளாத தில் அவர்களுக்கும் மனச் சங்கடம் இருக்கவே செய்கிறது. உடற்குறையுள்ள வர்கள், சிறப்பு தேவையுள்ள மாணவர்கள், வெளிநாட்டு ஊழியர்கள் என அனைவரையும் உள்ளடக்கும் சமூகமாக சிங்கப்பூர் விளங்க வேண்டும்,” என்பது இந்த துடிப்புமிக்க இளையரின் கனவு.



படிப்பு, சமூகப்பணி என்று பரபரப்பாகச் சுழன்று கொண்டி ருக்கும் பிரெமிக்கா, வீட்டில் பெற்றோருக்கு உதவியாகவும் தங்கைக்கு வழிகாட்டி யாகவும் பொறுப்புள்ள மகளாகத் திகழ்கிறார். விதவிதமாக சமைத்து வீட்டினருக்கும் நண்பர்களுக்கும் விருந்தளிப்பது இவருக்குப் பிடித்த பொழுதுபோக்கு. **படம்: திமத்தி டேவிட்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.